இணைந்த சேவைகள் சுற்றறிக்கை கடிதம் : 04/2018

எனது இலக்கம் : PA/CS/POLICY/பொது

அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.08.28

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆந் தரத்துடைய அலுவலர்களின் வினைத்திறன் காண் பரீட்சையினை பூர்த்தி செய்திராமையின் அடிப்படையில் சம்பள ஏற்றத்தினை ஒத்திவைத்தல் தொடர்பாக</u>**

2013.04.02 ஆந் திகதிய முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணத்திற்கு ஏற்ப அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆந் தரத்துடைய அலுவலர்கள், அத் தரத்துக்கு நியமிக்கப்பட்ட நாள் முதல் 05 வருடங்களினுள் உத்தேசிக்கப்பட்ட வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

02. அதற்கிணங்க புதிய சேவைப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் தரத்துக்கு 2013.04.02 ஆந் திகதியன்று அல்லது அத் திகதிக்குப் பின்னர் பதவியுயர்வு பெற்ற அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியெய்துவதற்கு உரிய காலமான 05 வருடம் 2018.04.01 ஆந் திகதியுடன் நிறைவு பெறுவதோடு அதுவரை உரிய வினைத்திறன் காண் பரீட்சையினை நிறைவு செய்திராத அலுவலர்கள் தொடர்பாக பின்வரும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இலக்கம் PSC/APP/4/62/2018 மற்றும் 2018.07.23 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறியத்தரப்பட்டுள்ளது.

I. நியமனத் திகதி முதல் 05 வருடங்களினுள் வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியெய்திராத அலுவலர்களின் நியமனத் திகதி முதல் 05 வருடங்களுக்குப் பின்னர் சம்பள ஏற்றத்தினை நிறுத்திவைத்தல்.

II. அடுத்தடுத்து வரும் பரீட்சைச் சந்தர்ப்பங்கள் 10 இனுள் வினைத்திறன் காண் பரீட்சையினை பூர்த்தி செய்ததன் பின்னர் அவ் அலுவலர்களின் நிறுத்தி வைக்கப்பட்ட சம்பள ஏற்றங்கள் உட்பட சம்பள ஏற்றத்தினைப் பெற்றுக்கொடுத்தல்.

ஒப்பம் /கே.வி.பீ.எம்.ஜே. கமகே

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்